சுருக்கம்

வேளாண்மை – இயற்கை வேளாண்மை குறித்த கொள்கையை உருவாக்குவது – வடிவமைப்பு வரைவுக் குழு - ஆணை வெளியிடப்படுகிறது.

.................................................................................................................................

வேளாண்மை (வே.உ.3)துறை

அரசாணை(2D)எண்: 123 நாள்: 11.09.2012

படிக்கப்பட்டது:

1. தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை, ஆணையர் அவர்களின் செயற்குறிப்பு எண். பல்வகை/ 8320/2012, நாள் 07.05.2012.
2. அரசு கடித எண்.13202/வே.உ.3/2012, வேளாண்மைத் துறை, நாள் 21.06.2012.
3. தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை, ஆணையர் அவர்களின் செயற்குறிப்பு எண் பல்வகை/ 8320/2012, நாள் 22.06.2012.

***

ஆணை:-

தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை, ஆணையர் அவர்கள் தனது செயற்குறிப்பில், தமிழகத்தில் இயற்கை வேளாண் கொள்கையை உருவாக்குவது குறித்து மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் 19.04.2012–அன்று வேளாண்மை மானியக் கோரிக்கை மீதான விவாதத்தின் போது பேரவையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்பின் அடிப்படையில், இயற்கை வேளாண் கொள்கை வடிவமைப்பு வரைவுக் குழு அமைக்கக் கோரியுள்ளார்.

2) மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் 2012–2013–ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கை விவாதத்தின் போது கீழ்க்கண்ட அறிவிப்பினை வெளியிட்டார்கள்:-

"மக்கள் நலனில் மிகுந்த அக்கறையுள்ள மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி, உணவுப் பாதுகாப்பை உறுதிசெய்து நஞ்சற்ற இயற்கை வேளாண்மையை ஊக்குவிக்கும் வகையில் இயற்கை வேளாண்மை குறித்த புதிய கொள்கை உருவாக்க நடவடிக்கை எடுக்கப்படும்."

3) பார்வை மூன்றில் படிக்கப்பட்ட கடிதத்தில், தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை, ஆணையர், தற்போதைய மாறிவரும் உலக சூழ்நிலையில் இயற்கை விவசாயம் மூலம் உற்பத்தி

[த.பி.பா]

செய்யப்படும் உணவுப் பொருள்களுக்கான முக்கியத்துவம் அதிகரித்து வரும் நிலையில் இயற்கை வேளாண்மை கொள்கையை உருவாக்குவதற்கான வடிவமைப்புக் குழு (Drafting Committee) அமைப்பதற்கு ஏதுவாக திருத்தப்பட்ட பரிந்துரையை அரசுக்கு அனுப்பியுள்ளார்.

4) தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை, ஆணையர் அவர்கள் இயற்கை வேளாண் உற்பத்தியை முன்னெடுத்துச் செல்வதற்காக உயர்மட்ட அதிகாரக்குழு அரசாணை (நிலை) எண்.264, வேளாண்(வே.உ.3)துறை, நாள் 03.10.2006–ன் படி ஏற்கனவே அமைக்கப்பட்டது என தெரிவித்துள்ளார். ஆனால், ஏற்கனவே வடிவமைக்கப்பட்ட வரைவுக் கொள்கையானது தற்போதைய சூழ்நிலையில் மேலும் மாற்றியமைக்கப்பட வேண்டியுள்ளது எனவும், ஆகவே, அனைத்து பயிர்களையும் உள்ளடக்கிய புதிய இயற்கை வேளாண் கொள்கையை வடிவமைக்க வேண்டிய அவசியம் எழுந்துள்ளது எனக் குறிப்பிட்டுள்ளார். வலுவான இயற்கை வேளாண் கொள்கையின் அடிப்படையில் தான் இயற்கை வேளாண் குறித்த உத்திகளை உருவாக்க முடியும். அதை அமுலாக்குவது குறித்த செயல் திட்டங்களையும் வலுவான கொள்கையின் அடிப்படையிலே உருவாக்க முடியும். இதனடிப்படையில் கீழ்க்கண்ட நோக்கங்களை (objectives) முன்மொழிந்துள்ளார்:-

<u>திட்டத்திற்கான நோக்கங்கள்:-</u>

- உலக அளவிலான இயற்கை வேளாண் விவசாயம் குறித்த சூழலில் நம்முடைய பங்களிப்பு குறித்து ஆராய்வது.
- இயற்கை வேளாண் துறையில் மாநில மற்றும் இந்திய வல்லுநர்களை ஒருங்கிணைத்து அவர்களுடைய ஆலோசனையை பெறுவது.
- முழுமையான இயற்கை வேளாண் கொள்கையை, எதிர்கால திட்டங்களுக்கு வழிகாட்டியாக அமையக் கூடிய வகையில் வடிவமைப்பது.

5) மேற்கண்ட நோக்கங்களை நிறைவேற்ற இயற்கை வேளாண் கொள்கையை வடிவமைப்பதற்கு ஏதுவாக தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை ஆணையர் அவர்கள் அதிகாரிகள், வல்லுநர்கள், தன்னார்வக் குழுக்களின் பிரதிநிதிகள் மற்றும் விவசாயிகள் ஆகியோர் கொண்ட 17 உறுப்பினர்களடங்கிய பட்டியலை இயற்கை வேளாண் கொள்கையை வடிவமைப்பதற்கான வரைவுக் குழுவில் சேர்க்க வேண்டி பரிந்துரைத்துள்ளதோடு, இயற்கை வேளாண் கொள்கை வடிவமைப்பு வரைவுக் குழுக் கூட்டம் 3 – 4 மாதங்களுக்குள் குறைந்தபட்சம் 8 முதல் 10 கூட்டங்கள் வரை நடத்தி இயற்கை வேளாண் கொள்கையை வடிவமைக்கலாம் என்றும் தெரிவித்து, மேற்காணும் செலவினத்தினை தமிழ்நாடு தோட்டக்கலை வளர்ச்சி முகமைக்கான திட்ட மேலாண்மை (TANHODA) நிதியிலிருந்து மேற்கொள்ளப்படும் எனவும் தெரிவித்து, மாநில அளவிலான இயற்கை வேளாண் கொள்கையை வடிவமைப்பதற்கான வரைவுக்குழு அமைக்க அரசினைக் கோரியுள்ளார்.

6) மேலே பத்தி 5–ல் உள்ள தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை, ஆணையரின் பரிந்துரையை அரசு கவனமுடன் பரிசீலித்து, தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை ஆணையர் அவர்கள் பரிந்துரைத்த 17 உறுப்பினர்களுடன், தன்னார்வக் குழுவின் பிரதிநிதியாக திருவாளர்கள் எம்.எஸ். சுவாமிநாதன் ஆராய்ச்சி அறக்கட்டளையைச் சார்ந்த திரு. பரசுராமன் அவர்களையும் சேர்த்து அதிகாரிகள், வல்லுநர்கள், தன்னார்வக் குழுக்களின் பிரதிநிதிகள் மற்றும் விவசாயிகள் ஆகியோர் கொண்ட கீழ்க்கண்ட 18 உறுப்பினர்களடங்கிய பட்டியலை

[த.பி.பா]

இயற்கை வேளாண் கொள்கையை வடிவமைப்பதற்கான வரைவுக் குழுவில் சேர்ப்பதற்காக இறுதி செய்யப்பட்டு ஆணை வெளியிடுகிறது.

| வ. எண் | பெயர் | பதவி | கொள்கை வடிவமைப்பு குழுவில் வகிக்கும் பதவி |
|---|---|---|---|
| I. அதிகாரிகள் | | | |
| 1 | டாக்டர் சந்தோஷ் பாபு, இ.ஆ.ப., | தோட்டக்கலை மற்றும் மலைப் பயிர்கள் துறை | தலைவர் |
| 2. | திரு சிவதாஸ் மீனா, இ.ஆ.ப., | வேளாண்மை ஆணையர் | உறுப்பினர் |
| 3. | திரு எம்.தங்கராசு | இணை இயக்குநர், தோட்டக்கலை, விதைச்சான்றளிப்பு மற்றும் இயற்கை வேளாண் சான்றளிப்பு | உறுப்பினர் |
| II. வல்லுநர்கள் | | | |
| 4. | டாக்டர் தேஜ் பிரதாப் | துணைவேந்தர், ஜே.கே.வேளாண்மைப் பல்கலைக் கழகம் மற்றும் ஐசிசிஒஏ–வின் தலைவர் | உறுப்பினர் |
| 5. | டாக்டர் யாதவ் | இயக்குநர், என்சிஒஎப் | உறுப்பினர் |
| 6. | திரு துரைராஜ் | இயக்குநர்,ஏபிஒஎப் (சான்றளிப்பு முகமை) | உறுப்பினர் |
| 7. | டாக்டர் என்.செல்வராஜ் | பேராசிரியர் மற்றும் தலைவர், ஹெச்ஆர்எஸ், ரோஸ் பார்க், உதகை | உறுப்பினர் |
| III. தன்னார்வக் குழுவின் பிரதிநிதிகள் | | | |
| 8. | திரு மனோஜ் மேனன் | நிர்வாக இயக்குநர், ஐசிசிஒஏ, பெங்களூர் | உறுப்பினர் |
| 9. | திரு ராஜசீலம் ரெட்டி | மேலாண் இயக்குநர், சிரஸ்டா நேச்சுரல் பையோ புராடெக்ட் லிமிடெட், ஹைதராபாத் | உறுப்பினர் |
| 10. | திரு எஸ்.சுனில்குமார் | முதன்மை ஆலோசகர், அம் கன்சல்டிங் ஐஎன்சி, சென்னை. | உறுப்பினர் |
| 11. | திரு டீ.ராமகிருஷ்ணன் | மலையாண்டிப்பட்டினம், பொள்ளாச்சி | உறுப்பினர் |
| 12. | டாக்டர் அரு. சோலையப்பன் | இயற்கை வேளாண் அமைப்பு, செங்கல்பட்டு | உறுப்பினர் |
| 13. | திரு அனந்தசயனன் | அமைப்பாளர் "Restore" இயற்கை விற்பனையகம் | உறுப்பினர் |
| 14. | திரு. பரசுராமன் | எம்.எஸ். சுவாமிநாதன் ஆராய்ச்சி அறக்கட்டளை | உறுப்பினர் |
| IV. விவசாயிகள் | | | |
| 15. | திரு ஒ.வி.ஆர்.சோமசுந்தரம் | விவசாயி, பொள்ளாச்சி | உறுப்பினர் |
| 16. | திரு எஸ்.ரங்கநாதன் | விவசாயி, மன்னார்குடி, தஞ்சாவூர் | உறுப்பினர் |
| 17. | திரு அருள் மைக்கேல் ஹென்றி | விவசாயி, அழகப்பாபுரம், கன்னியாகுமரி | உறுப்பினர் |
| 18. | திரு கிளாட்சன் ராபின் | விவசாயி, உடையார்விளை, குளச்சல் | உறுப்பினர் |

[த.பி.பா]

7) மேற்காணும் இயற்கை வேளாண் கொள்கை வடிவமைப்பு வரைவுக் குழுக் கூட்டத்தில் கலந்து கொள்ளும் உறுப்பினர்களுக்கு ஒரு அமர்வுக்கான மதிப்பூதியத்தினை ரூ.500/- (ரூபாய் ஐநூறு மட்டும்) என வழங்கவும், தினப்படியினை வழங்கவும் (அரசு சாரா உறுப்பினர்கள் தவிர) மற்றும் பயணப்படியினை திரும்ப வழங்கவும் (Re-imbursement), இச்செலவினத்தைத் தமிழ்நாடு தோட்டக்கலை வளர்ச்சி முகமைக்கான திட்ட மேலாண்மைக்கான நிதியிலிருந்து மேற்கொள்ளவும் அனுமதித்து அரசு ஆணையிடுகிறது.

8) மேலும், தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை ஆணையர் இயற்கை வேளாண் கொள்கை வடிவமைப்பு வரைவுக் குழுக் கூட்டம் நடத்தப்பட்ட விவரம், முன்னேற்றம் குறித்த அறிக்கையினை அரசுக்கு அவ்வப்போது அனுப்புமாறு அறிவுறுத்தப்படுகிறார்.

9) இவ்வரசாணை, நிதித்துறையின் இசைவுடன் அத்துறையின் அ.சா.கு.எண் 51209/ வேளாண்மை/2012, நாள் 10.9.2012-இன்படி வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

சந்தீப் சக்சேனா,
வேளாண்மை உற்பத்தி ஆணையர்
மற்றும் அரசுச் செயலாளர்.

<u>பெறுநர்</u>

தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை ஆணையர், சென்னை-5.
இயற்கை வேளாண்மை கொள்கை வடிவமைப்பு வரைவுக் குழு உறுப்பினர்கள்
வேளாண்மை ஆணையர், சென்னை-5.
அரசு செயலாளர், கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத்துறை, சென்னை-9.
அரசு செயலாளர், சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை, சென்னை-9.
மாநில முதன்மைக் கணக்காயர், சென்னை-18/(பெயரில்)
மாநில கணக்காயர், சென்னை-18/(பெயரில்)
சம்பள கணக்கு அலுவலர், சென்னை-8(கிழக்கு)

<u>நகல்</u>

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் செயலாளர், சென்னை-9.
மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சரின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை-9.
வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் அரசு செயலாளரின் தனிச் செயலர், சென்னை-9.
நிதித்துறை, சென்னை-9.
வேளாண்மை(எ.வி) சென்னை-9.

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

11.9.2012
பிரிவு அலுவலர்.